DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.42/2021**

Prosecution witness **PW.7 (LW.8) (Examination after Framing of charges)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Venkatesh Prabhu (IFS) | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **06.02.2026**

**06.02.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது கூடலூர் வனக்கோட்ட மாவட்ட வன அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு பைக்காரா வனச்சரக பயிற்சி உதவி வன பாதுகாவலராக பணிபுரிந்து வந்த போது 06.11.2020ம் தேதி இரவு பைக்காராவிலுள்ள எனது கெஸ்ட் ஹவுசில் நான் இருந்த போது இரவு 09.30 மணியளவில் மாவட்ட வன அலுவலர் திரு.குருசாமி தபேலா அவர்கள் எனக்கு போன் செய்து குன்னூர் வனச்சரகத்தில் சிறுத்தை ஒன்று சுருக்கில் மாட்டி இறந்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளது என்றும், எனவே உடற்கூராய்விற்கு என்னை நேரடியாக செல்லுமாறு கூறினார். சிறிது நேரத்தில் வனச்சரக அலுவலர் சசிக்குமார் அவர்கள் எனக்கு போன் செய்து மேற்படி அதே தகவலை கூறினார்.

3. அதன்பேரில் மறுநாள் 07.11.2020ம் தேதி காலை 10 மணிக்கு குன்னூர் சரகம், மேலூர் பிரிவு AVT தனியார் எஸ்டேட்டிற்கு நானும் என்னுடன் உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) திரு.செல்வக்குமார் அவர்களும் சென்றோம். சம்பவயிடத்திற்கு சென்ற போது அங்கு வனச்சரக அலுவலர் திரு.சசிக்குமார் மற்றும் வனவர் மற்றும் வனக்காப்பாளர்கள் இருந்தார்கள். அந்த இடத்தில் சிறுத்தை ஒன்று இடுப்பில் சுருக்கு மாட்டடப்பட்ட நிலையில் அந்த சுருக்கு கம்பி

அருகிலிருந்த செடி ஒன்றில் கட்டப்பட்டிருந்த நிலையில் அசைவின்றி உட்கார்ந்த நிலையில் இறந்து இருந்தது.

4. மருத்துவர்கள் கண்ணன் மற்றும் விஜயக்குமார் ஆகியோர் அந்த சிறுத்தையை சுருக்கிலிருந்து மீட்டு எங்களது மேற்பார்வையில் சம்பவயிடத்தில் வைத்து உடற்கூராய்வு மேற்கொண்டார்கள். உடற்கூராய்வுக்கு பிறகு மேற்படி சிறுத்தையானது இடுப்பில் மாட்டப்பட்ட சுருக்கினால் இறந்துவிட்டதாக கூறினார்கள். உடற்கூராய்வுக்கு பிறகு சம்பவயிடத்தில் வைத்து சிறுத்தையின் உடலை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்பை சேர்ந்த இரண்டு நபர்கள் ஆகியோர் முன்னிலையில் எரியூட்டினோம்.

5. வனச்சரக அலுவலர் திரு.சசிக்குமார் அவர்கள் சம்பவயிடத்தை பார்வையிட்டு ஸ்தல மகஜர் தயார் செய்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 ஸ்தல மகஜரில் பின்பக்கத்தில் முதலாவதாக கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

(இத்துடன் முதல் விசாரணை முடிக்கப்பட்டது)

**<u>குறுக்கு விசாரணை</u>**

ஸ்தல மகஜரை வனச்சரக அலுவலர் தான் எழுதினாரா என்றால் ஆம். நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்பாக வனச்சரக அலுவலர் என்ன விசாரணை மேற்கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஸ்தல மகஜர் தயார் செய்ததற்கு பின்னிட்டு அங்கு என்ன விசாரணை நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.02.06 10:22:18 +0530

JUDICIAL MAGISTRATE,
COONOOR.